

தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
மன்னார்குடி பானுகுமார்
ராஜம் பதிப்பகம்
இணையதளத்தில் banukumar.in

# தாயுமானவரின் கடவுள் கோட்பாடு

இன்றைய காலகட்டத்தில் பல்வேறு மதங்கள், வழிபாட்டு முறைகள், சடங்குகள் நம்மிடையே கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

இவையனைத்தும் மனித குலத்தை இறைணர்விலும், அறநெறியிலும் மேன்மையடையச் செய்வதே என்றாலும் பிணக்குகளும், பூசல்களுமே இன்று நிலவுகின்றன.

ஆங்காங்கே மதச் சண்டைகளும், கலவரங்களும் நிகழ்கின்றன. இவற்றையெல்லாம் தவிர்க்க உண்மை நிலையினை உணர்வது அவசியமாகிறது.



எது உண்மை தெய்வம் என்ற தெளிவு வரும்போதுதான் பிணக்குகள் தவிர்க்கப்படும். ஒற்றுமை ஓங்கும், அமைதி நிலவும்.

அதற்கு தாயுமானவர் தரும் கடவுள் கோட்பாடுகளை இங்கு சிந்திப்போம்.

## இயற்கையும் இறைவனும்

**இறைவனை இயற்கை என்கிறார் தலைசிறந்த கவிஞர் தாயுமானவர்.**

- **“என்றும் உள்ள இயற்கையாகி” (ஆகாரபுவனம் 21)**
- **“என்றும் உள்ள இயற்கையாகி” (மண்டலத்தின் 2)**
- **“என்றுமாம் இயற்கைதன்னை” (மண்டலத்தின் 4)**
- **“அவிகாரம் நிர் விகாரம்”**

இறைவனையும் இயற்கையையும் பாடாத கவிஞன் உலகிலேயே இல்லை எனலாம். இயற்கையின் அழகில் இறைவனின் சக்தியை உணர வைப்பது கவிஞர்களின் தலையாய பணியாகும்.

பூவின் மலர்ச்சியிலும், ஆற்றின் சலசலப்பிலும், மரங்களின் அசைவிலும், பறவைகள் எழுப்பும் ஒலிகளிலும், காற்றின் சுகந்தத்திலும் இறைவனைக் காண்பவன் கவிஞன்.

அவன் நிசப்தங்களில் சப்தங்களையும், சப்தங்களில் நிசப்தங்களையும் இனம் காண வல்லவன்.

இயற்கையின் வனப்பை இழை இழையாக பிரித்தெடுக்கத் தெரிந்தவன். படைப்புக்களில் படைத்தவனைக் காணத் தெரிந்த படைப்பாளியே கவிஞன்.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊணாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய் நீக்கமற நிறைந்திருப்பவனை இயற்கையின் ஒவ்வொரு அழகிலும் நெஞ்சார உணர முடியும்.

**“உலகம் பிறந்தது எனக்காக; ஓடும் நதிகளும் எனக்காக”** என்று தொடங்கும் கவியரசு கண்ணதாசனின் பாடலில்

**காற்றில் மிதக்கும் ஒலிகளிலே**
**கடலில் மிதக்கும் அலைகளிலே**
**இறைவன் இருப்பதை நானறிவேன்**
**என்னை அவனே தானறிவான்**

என்ற வைர வரிகள் நம் சிந்தனைக்கு உணவளிக்கும்.

இயற்கையை அணுவணுவாக இரசித்து அதன் அழகிலும், அசைவிலும் மனதைப் பறிகொடுத்து ஆனந்த தாண்டவமாட ஒரு கவிஞனால் மட்டும்தான் இயலும்.

"**எங்கெங்கு காணினும் சக்தியடா**" என்று பாரதி பாடுவான். காணும் காட்சிகளில் யாவும் இவன் பராசக்தியைக் காண்கிறான்.

"**இருக்கும் இடத்தைவிட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகின்றாய் ஞானத்தங்கமே!**" என்றார் கவி. கா.மு.ஷெரீப்.

'தூணிலும் இருப்பான்; துரும்பிலும் இருப்பான்' என்று போற்றும் இறைவனை, நம் பிடறி நரம்புக்கும் சமீபத்தில் இருக்கும் அந்த மூலவனை, இருக்கும் இடத்தைவிட்டு எங்கேயோ நாம் தேடி அலைகின்றோம்

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற தாரக மந்திரத்தை ஏற்று தன் அரசியல் பயணத்தை தொடர்ந்தவர் அறிஞர் அண்ணா.

ஒரு கவிஞர் இறைவனை எங்கெல்லாம் காண்கிறார் என்பதைச் சற்று பாருங்கள்.

**பொன்னிலே பொருளிலே புன்னகை புரிவோன்**
**விண்ணிலே மண்ணில் விந்தைகள் செய்வோன்**
**கண்ணிலே ஒளியாய்க் காரிருட் களைவோன்**
**தன்னிலே தானாய்த் தனித்தியங் கிடுவோன்**
**என்னிலே உணர்வை எழுப்பிடும் இறையோன்**

இயற்கையின் சிரிப்பில் இறைவனைக் கண்டு இன்புறும் நம் கவிஞரின் வரிகள் நமக்கு இறைவனின் மேன்மைகளை தெளிவுற எடுத்தியம்புகிறது.

ஆழ்கடல் மௌனம், ஓடையின் சல சலப்பு, தென்றலின் இதம், புயலின் வலிமை, கீச்சிடும் பறவைக் கூட்டம், மரங்கள், அதில் அசைந்தாடும் கிளைகள், இலைகள், மலர்கள் என எல்லாமே இயற்கை தன்னை வெளிப்படுத்திக் கொண்ட பல்வேறு அம்சங்கள்.

இவற்றை எல்லாம் தினம் தினம் பலரும் கடந்து போகிறார்கள், சிலர் மட்டுமே நின்று ரசிக்கிறார்கள், வெகு சிலர் மட்டுமே இயற்கையில் இறைவனையே காண்கிறார்கள்.

இயற்கை, ஒவ்வொன்றையும் மிகவும் கவனமாகப் படைத்திருப்பதற்கு, இந்த பூமியிலுள்ள ஒவ்வொரு அணுவும் சாட்சியாக விளங்குகிறது.

அதற்கு நாம் கவனம் கொடுத்து ரசிக்கத் துவங்கினால், அதுவே இறைவனை அடையும் முதற்படி என்பதில் சந்தேகமில்லை.

தாயுமானவர் போல், இயற்கையை இறைவனாகக் கண்டவர்கள், அதன்பின் இறைவனில் தன்னைக் காண்பது ஒன்றும் பெரிதில்லை அல்லவா?

## அறிவுடையப் பரம்பொருள் ஒன்றே

.

“நாம் எல்லோரும் உலகம் என்ற மண்மீது வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமக்கிருப்பது ஒரே சூரியன் தான். நமக்கு ஏற்படும் நீர் தேவைகளை முடிப்பதற்கு இருப்பது ஒரே கடல் தான்.

நாம் எல்லோரும் மூச்சு விடுவதற்கு உள்ள காற்றும் ஒன்றுதான். இவற்றில் ஒன்றைக்கூட நம்மில் எவருமே உற்பத்தி செய்தது இல்லை. நமது முன்னோர்களும் செய்ததில்லை.

எல்லாம் வல்லதாகிய இறைநிலை என்னும் இயற்கையானது தனது

---

பூரணம், பேராற்றல், பேரறிவு என்ற மூலதனத்தைக் கொண்டும் அதன் பரிணாமம், இயல்பூக்கம், கூர்தலறம் என்ற இயக்க நியதிகளைக் கொண்டும் வான்மண்டலத்தையும் உலகையும் உருவாக்கி, இந்த அழகிய வளம் நிறைந்த உலகின் மீது நம்மையும் உருவாக்கி வாழ வைத்திருக்கிறது.

நமக்கு அன்னையாகவும், தந்தையாகவும் உள்ள அருட்பேராற்றலான இயற்கை நாம் அனைவரும் நலமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ எல்லா வளங்களையும் நிறைவாக அமைத்துக் கொடுத்திருக்கிறது.

**“எண்தருநல் லகிலாண்ட கோடியைத்தன்அருள் வெளியில்**
**இலக வைத்துக் கொண்டு நின்ற ஒன்றை” (மண்டலத்தின் 1)**

- **“மறை ஒன்றென விளம்ப” (வண்ணம் 1)**
- **“எவையுந் தன்னுள் அடங்க வொரு முதலாகும்” (வண்ணம் 3)**
- **“அறிவொன் றென விளங்கும்” (வண்ணம் 4)**
- **“நின்ற ஒன்றே” (அகவல் 3)**
- **என்னை யாளும் ஒருவர்” (பன்மாலை 2)**
- **“வெளியாக வந்த ஒன்றே” (ஆகாரபுவனம் 4)**
- **“நிற்குணமாய் நின்ற ஒன்றே” (ஆகாரபுவனம் 5)**
- **“என் உள்ளத்து ஒருவர்” (பாயப்புலி 32)**

**வேதாத்திரி மகரிசி அவர்கள், மூலமாகிய பரம்பொருள் வந்த இறைத்தத்துவம் வள்ளல் பொருமான் உரைத்தார் என்பதும் புலப்படுகிறது.**

**“வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்னும்**

**வளம் நான்கும்” ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வமாம்”**

**என்றார் வேதாத்திரி மகரிசி .**

**"அருட்பெருவெளியில் அருட்பெரு உலகத்து**

**அருட்பெரும் தலத்து மேல் நிலையில்**

**அருட்பெருஞ் ஜோதி என்னரசே?**

மகான் வேதாத்திரி மகரிசியும், இராமலிங்க வள்ளலாரும் தாயுமானர் சொன்னது போலவே, ஒரே மூலத்திலிருந்து மலர்ந்ததுதான் அனைத்தும் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தினார்கள்.

அந்த மூலத்தை பெருவெளி என்றார் வேதாத்திரியார். அருட்பெருஞ்சோதி என்றார் வள்ளலார். தாயுமானவரோ அருள்வெளி என்றார்.

அருள்வெளியின் பெரும் செயல்களை தனது அகத்தவத்தால் உணர்ந்து உணர்த்தியவர் தாயுமானவர்.

அருள்வெளிக்கு அல்லது இறைவெளிக்குத் தன்னைத் தானே இறுக்கிக் கொள்ளும் தன்மை உண்டு. இறைவளியின் இந்தத் தன்னிறுக்கம்தான் அதன் தன்மாற்றத்திற்கான முழுமுதற் காரணம்.

எனவே இந்தப் பிரபஞ்சத்தில் நாம் காண்கின்ற காணாத அனைத்தும் அருள்வெளியின் வடிவங்களே என்கிறார் தாயுமானவர்.

மூலமாகிய வெளி ஞாலமானதின் விரிவான விளக்கமே தாயுமானவரின் விஞ்ஞானம். வேதாத்திரியாரின் விஞ்ஞானம். வள்ளலாரின் விஞ்ஞானம்.

ஞாலத்தை மூலத்தின் தன்மாற்றமாக உணர்வது தத்துவம். ஒரே சத்தியத்தின் இரு முகங்களான விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் இணையும் இடம் தான் வெளி.

---

ஒரு முழுமையான கடவுள் தத்துவத்தை நமக்குத் தருகிறார் தாயுமானவர். அதன் இறைத்தத்துவம்

- பரமாத்மாவே ஜீவாத்மாவாக வருகிறது என்ற உபநிடதக் கருத்துக்கும்,
- எனது தந்தையும் நானும் ஒன்றே என்ற விவிலியத்தின் வாசகத்துக்கும்,
- அனைத்துப் புகழும் இறைவனுக்கே என்னும் திருக்குர்ரானின் வசனத்திற்கும்,
- சிவமே சீவனாயிற்று என்ற சைவசித்தாந்தப் பார்வைக்கும்,
- அறிவேதான் தெய்வம் என்ற தாயுமானவரின் வாக்கிற்கும்,
- அறிவேதான் நான் என்ற இரமணரின் உள்ளுணர்விற்கும்,
- ஆதிசங்கரரின் நிர்வண சதகத்திற்கும்,
- வேதாத்திரி மகரிசியின் சுத்தவெளி தத்துவத்திற்கும்,

தர்க்கரீதியான விஞ்ஞானப் பூர்வமான விளக்க உரையாக அமைகிறது.

அந்த அருள்வெளியின் விலாசத்தை தாயுமானவர் போல் மானுடத்திற்குச் விளக்கமாகச் சொன்னவர் யாருமில்லை!

அங்குஇங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்,
ஆனந்த பூர்த்திஆகி,
அருளொடு நிறைந்தது எது? தன்அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்

தங்கும் படிக்கு இச்சை வைத்து, உயிர்க்கு உயிராய்த்
தழைத்தது எது ? மனவாக்கினில்
தட்டாமல் நின்றது எது? சமயகோ டிகள் எலாம்
தம்தெய்வம் எம்தெய்வம் என்று

எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கு இடவும் நின்றது எது?
எங்கணும் பெருவழக்காய்,

யாதினும் வல் ஒரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளது எது? மேல்

கங்குல்பகல் அறநின்ற எல்லை உளது எது? அது
கருத்திற்கு இசைந்தது அதுவே.
கண்டன எலாம் மோன உருவெளியது ஆகவும்
கருதிஅஞ் சலிசெய்குவாம் (திருவருள் 1)

மெய்ப்பொருள் என்ற கடவுள் எங்கிருக்கிறார் என்ற ஆறு கேள்விகளை நம்மிடமே வைக்கிறார் தாயுமானவர்.

1. அங்கு எங்கு என்று சொல்ல முடியாதபடி, அண்டவெளி முழுவதும் எங்கும் நிறைந்து விளங்கும் ஒளிமயமாகி. உயிர்களுக்குப் பேரின்பத்தை நல்கும் நிறைவான ஒன்றாகி, தனது திருவருளாகிய சக்தியோடு கூடி, எங்குமாய் நிறைந்து நின்ற பொருள் எது?
2. தனது திருவருளாக விளங்கும் ஆகாயத்தின்கண் அண்ட கோடிகள் அனைத்தும் தங்குமாறு விரும்பி இடம் கொடுத்து, உயிருக்கு உயிராய் நின்று, அவ்வுயிர்களைத் தழைக்கச் செய்தது எது?
3. மனத்துக்கும் வாக்குக்கும் தட்டுப்படாமல் நின்றது எது?
4. சமயகோடிகள் பலவும், “இது எங்கள் தெய்வம், இது எங்கள் தெய்வம்!” என்று எவ்விடத்தும் தங்களுக்குள் தொடர்ந்து எதிர்வழக்கு ஆடும்படி செய்த பொருள் எது?
5. எல்லா இடங்களிலும் பேசப்படுவதும், எல்லாப் பொருள்களையும் இயக்கும் அறிவாய் விளங்குவதும், உயிர்களுக்கு இன்பப் பேற்றினை வழங்குவதும் எல்லா காலத்திலும் நிலைத்து நிற்பதும், ஆகிய பொருள் எது?

6. மேலான இரவுபகல் அற்ற எல்லையில் உள்ள பொருள் எது?

இந்த ஆறு கேள்விகளுக்கும் தாயுமானவரே பதிலும் சொல்கிறார்.

எது?எது? எது? என்ற கேட்ட - அந்த அது - நம்முடைய கருத்திற்கு இசைந்தபொருளே.

அந்தப் பொருளையே கண்ணால் காணும் பொருள்கள் அனைத்துமாகவும், மௌனமே உருவமான வெளியாகவும் (வெட்டவெளியாகவும், சுத்தவெளியாகவும். அருள்வெளியாகவும், தூய ஒளியாகவும்) நினைத்து வணங்குதல் செய்வோம்.

வெளி என்றால் என்ன? விடையாக வருகிறார் வேதாத்திரி மகரிஷி.

"வற்றாயிருப்பு, பேராற்றல், பேறறிவு, காலம் எனும் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வம்" என்கிறார்.

"அருட்பெருவெளியில் அருட்பெருவுலகத்து

அருட்பெரும் தலத்து மேல் நிலையில்

அருட்பெருஞ் ஜோதி என்னரசே?

தாயுமானவரும், வள்ளலாரும், வேதாத்திரியாரும் ஒரே மூலத்திலிருந்து மலர்ந்ததுதான் அனைத்தும் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தினார்கள்.

அந்த மூலத்தை பெருவெளி என்றார் வேதாத்திரியார்.

அருட்பெருஞ்ஜோதி என்றார் வள்ளலார்.

அருள்வெளி என்றார் தாயுமானவர்.

---

அத்வைத சாரத்தை எளிமைப்படுத்தி தமிழ்ப்படுத்தி அதோடு விஞ்ஞானப் பார்வைகைக் கலந்தால் நமக்குக் கிடைப்பது தாயுமானவரின் தத்துவம்.

மெய்ஞ்ஞானம் காட்டும் கடவுளை, எல்லையற்றதை எல்லையற்றதாகவே பார்க்கக்கூடிய விஞ்ஞானப் பர்வையோடு அணுக வேண்டும்.

விருப்பு, வெறுப்பு, இன்ப, துன்ப நிலை கடந்த அருள்வெளிக்கு நாம் எதைக் கொடுத்த விட முடடியும்?

அதற்கு என்ன தேவையிருக்கிறது நாம் கொடுக்க? நாம் யாருக்கு கொடுக வேண்டும் என்று தாயுமானவர் எதிர்பார்கிறார் என்றால், சக மனிதருக்கு. சக உயிர்களுக்கு நாம் கொடுக்க வேண்டும்.

எல்லாரும் இன்புற்றிருக்குமாறு நாம் கொடுக்க வேண்டும். எங்கே கொடுக்க வேண்டுமோ அங்கே கொடுக்காமல்,எங்கே கொடுக்க முடியாதோ அங்கே கொண்டுபோய் கொடுப்பதால்தான் இன்று சமுதாயத்தில் நாம் காணும் பல சிக்கல்கள்.

இந்தச் சிக்கல்களையும் அவைகளைத் தீர்க்கும மார்க்கத்தையும் சுட்டிக் காட்டும் சீரிய மார்க்கமே தாயுமானவர் தரும் இறைத்தத்துவம்.

அருள்வெளி என்ற பெருவெளி அல்லது சுத்தவெளி அரூபமானது. எல்லையற்றது என்னும் வேதாந்த சத்தியங்களிலிருந்து நழுவி, கடவுளை மனிதனைப் போன்று சிறு உருவத்தில் சித்தரித்து கல்யாணம் செய்து, திருவிழாக்கள் நடத்தி வழிபடுவது மனிதனின் அத்துவிதமான கற்பனைகளின் உச்சக்கட்டம்.

---

திரும்பத் திரும்ப சொல்லப்பட்டு வந்த இந்த கற்பனைக் கதைகளுக்கு அப்பாற்பட்டதே வேதாத்திரியம். (தாயுமானவர்-வள்ளலார்-வேதாத்திரி மகரிசி மூவரும் ஒருவரே)

**"அவனின் இயக்கம் அணுவாற்றல்,**

**அணுவின் கூட்டுப் பாக்குவம்" நீ"**

என்ற வேதாத்திரிய ஞானக்களஞ்சிய வரிகள் மூலமாகவும்,

"பழுத்த நிலை வரும் வரையில் நீ. நான் என்போம்

பதமடைந்தோம் ஒன்றானோம் பரமானந்தம்"

என்ற வரிகள் மூலமாகவும் அணுமுதல் அனைத்தும் வெளியின் இயக்க நிலைகளே என்று அனைத்தையும் ஒன்றாகக் காணுகின்ற அத்வைத்க காட்சியைத் தருகிறது வேதாத்திரியம்.

"கடலும் அதன் அலையும் போன்றதே பிரம்மமாகிய வெளியும் உயிர்களும் என்பதை வேதாத்திரி மகரிசி தனது வேதாத்திரியத்தில்,

"ஆதிஎன்ற பிரம்மமது கடல் போல் ஒன்று

அதில்எழுந்த ஜீவன்எல்லாம் அலைபோல் ஆகும்

பேதமுடன் அலைகளவை விரிந்த போதும்

பிரியாது கடலைவிட்டுக் கடல் ஒன்றேனும்"

என்று கூறியிருக்கிறார்.

- "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று திருவள்ளுவரும்,
- "ஒன்றாகக் காண்பதே காட்சி" என்று அவ்வையாரும்
- "காக்கை குருவி எங்கள் ஜாதி என்று பாரதியாரும்
- "யாதும் ஊரே யாவதும் கேளிர்" என்று கணியன் பூங்குன்றனாரும்.

குரல் கொடுத்தனர்.

இவர்கள் தந்த அத்வைக் குரல்களின் குவியலே தாயுமானரின் தத்துவம்.

அருள்வெளியாகிய தெய்வத்திற்கு ஓராயிரம் பெயர்கள் உண்டு. ஒவ்வொரு பெயரும் ஒரு தெய்வம் எனக் கருதுவது அஞ்ஞானம்.

தெய்வம் ஒன்றுதான் என்ற அத்வை தத்துவத்திற்கு முற்றிலும் முரண்பட்டதுதான் பல தெய்வக் கோட்பாடு.

அஞ்ஞானத்தில் மூழ்கி அவதியுறுகிற மனிதர்களை மீடகவல்லதே தாயுமானரின் இறைத்தத்துவம்.

ஒவ்வொரு நாமமும் ஒவ்வொரு தெய்வமென்று நினைத்த காலகட்டத்தில் பாரதியார் வெகுண்டெழுந்து,

“தெய்வம் பலப்பல சொல்லிப்

பகைத்தீயை வளர்ப்பவர் மூடர்

உய்வதனைத்திலும் ஒன்றாய்

எங்கும் ஓர் பொருளானது தெய்வம்” என்று சாடினார்.

“ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்

பல்லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வம் உண்டாம்

எனல் கேளீரோ.”

என்னும் பாரதியின் ஆதங்கத்தைப் பாமரனும் உணரக்கூடிய வல்லமை அவனுக்கு தருகிறது தாயுமானவரின் தத்துவம்.

எல்லையற்ற வெளிதான் தெய்வம். வெளியின் வெளிப்பாடே இந்தப் பிரபஞ்சம். வெளிப்பாட்டின் முழு முதல் இயக்கவிசை வெளியின் தன்னிறுக்கமே எனப் பலப்பல செய்திகளை தருகின்ற உலகப் பொதுவான இறைஞானம் வேதாத்திரியம்.

"இறநிலை தன்னிறுக்கத்தால் எழுந்த முதல் தன்மாற்றம் இறைத்துகளாம்.

இறைத்துகள் கூடியதோர் தொகுப்பே விண்

நிறைவெளியின் விண் சுழல வெளியழுத்த விளைவாக

விண்கரைய அக்கரைசல் வெளியேற

அனைத்து அலைகள் காத்தமாச்சு " (வேதாத்திரி மகரிசி)

காந்தத்தின் மூலம் விண்ணின் சுழற்சி, சுழற்சியின் மூலம் இறைவெளியின் தன்னிறுக்கம்.

இறைவெளி, விண், காந்தம் என்னும் மூன்றின் கூட்டாக, இப்பிரபஞ்சத்தைப் பார்த்தால் தாயுமானவர் தத்துவமும் வேதாத்திரியமும் சைவசித்தாந்தத்தை நமக்கு நினைவூட்டும்.

வெளியின் வெளிப்பாடாக பிரபஞ்சத்தைப் பார்த்தால் தாயுமானவரின் விஞ்ஞானமும் கலந்த அத்வைதம்.

## தாயுமானவரின் கடவுள் கோட்பாடு என்பது

- ரிஷிகள் தந்த பிரம்ம வித்தை.
- நபிகள் நாயகம் இறக்கிய அல்லா ஞானம்.
- இயேசுவின் தந்தைக்கும் குமாரனுக்கும் உள்ள விளக்கம்.
- அருட்பெருஞ்சோதியின் பேரொளி.
- வேதாத்திரி மகரிசியின் சுத்தவெளி தத்துவ இரகசியம்.

- தானே தன்யைறிந்த வித்தை.

தயிரிலே பால் இருக்கிறது என்று சொல்வதைவிட பாலே தயிராக மாறியிருக்கிறது என்பது சாலச் சிறந்தது.

சூறாவெளியில் காற்று இருக்கிறது என்று சொல்வதைவிட காற்றே சூறாவெளியாக மாற்றம் அடைந்து இருக்கிறது என்பது சாலச் சிறந்தது.

பிரம்மாகிய வெளி ஒவ்வொரு ஜீவராசியிலும் இருக்கிறது என்று சொல்வதைவிட வெளியே ஒவ்வொரு ஜீராசியாகத் தன்மாற்றம் அடைந்துள்ளது என்பதே உண்மை.

ஒன்றே பலவானது என்று வேத காலத்திலிருந்து சொல்லப்பட்டு வந்தாலும், அந்த ஒன்று வெளியே என்று தொட்டுக் காட்டியவர் தாயுமானவர்.

தொட்டுக் காட்டியதோடு அந்த ஒன்று எப்படிப் பலவானது என்பதை விளக்கியதும் தாயுமானவரே.

அனைவரும் வாழ்க வளமுடன்!

வாழ்க தாயுமானவர் அழியாப் புகழ்.